# உடுக்கடி கதையும்

## அதனுடன் தொடர்புடைய வேறு தகவல்களும்

—கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை—

உடுக்கு என்னும் வாத்தியத்தை வாசித்த வண்ணம் கதைப்பாடலை இனிமையுடன் உணர்ச்சி வெளிப்படப்பாடிக் கதை சொல்லும் மரபு நீண்ட காலமாகத் தமிழகத்திலும், ஈழத்திலும் இருந்து வருகிறது. இதுவே உடுக்கடி கதையென வடஇலங்கையிற் சொல்லப்படுகிறது. மட்டக்களப்பில் இதனை உடுக்குச் சிந்தென்பர். (வி. சி. கந்தையா : 1964 : 168) தமிழகத்தில் உடுக்கடிப் பாட்டெனக் கூறுவர் (பெருமாள் : 1979 : 22) உடுக்குடன் தாளம், சாப்பளாக்கட்டை ஆதிய இசைக் கருவிகளையும் இசைப்பது வழக்கமாகும். நடிப்பும், வேடப்புனைவுமின்றி கதைகள், உணர்வு கலந்ததாக உடுக்கடிப்பாட்டில் விளக்கம் பெறுமெனச் சொல்வர் பெருமாள் (1979 : 23). இன்று போன்று திரைப் படங்களோ, தொலைக்காட்சிகளோ, வேறு பொழுதுபோக்கு வசதிகளோ இல்லாத காரணத்தினால் அக்காலத்தில் உடுக்கடி கதையை மக்கள் பெரிதும் விரும்பிக் கேட்டு வந்தனர்.

சமயத் தொடர்புடைய ஆடல், பாடல்கள், கதைதழுவிய கூத்துவடிவங்களாகியமை போல உடுக்கடி கதைகளும் காலப்போக்கிற் கூத்துவடிவங்களாகின. குறிப்பாக வடஇலங்கையில் ஆடப்படும் காத்தவராயன் கூத்து, கோவலன் கூத்து என்பன உடுக்கடி கதைகளிலிருந்தே பிறந்தன எனக் கொள்ள இடமுண்டு.

கிராமப்புறங்களில் வாழும் மக்கள் இன்றுங்கூட சின்னமுத்து, பொக்களிப்பான் போன்ற தொற்று நோய்கள் ஏற்பட்டால், அவை முத்து மாரியம்மனால் ஏற்பட்டன என நம்புகின்றனர். முத்துமாரியம்மனுக்குத் தாம் ஏதோ குறைசெய்த காரணத்தினாலேதான் இந்நோய்கள் உண்டாகின எனவும், அம்மனுக்குப் பொங்கிப் படைத்துக் குளுத்தி செய்து மகிழ்வித்தால் நோய்கள் நீங்கிவிடுமெனவும் பூரணமாக நம்புகின்றனர். மிக அண்மைக்காலம்வரை அதாவது 1970 ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாணம், பண்ணையிலுள்ள அம்மன் கோயிலுக்கு அருகிலுள்ள மக்கள் காத்தவராயன் கூத்தை ஆடுவதன் மூலம் இந்நோய்களை நீக்கலாம் எனக் கருதி இக்கூத்தை அடிக்கடி ஆடுவித்தனர். இவ்வாறே பருத்தித்துறையில் நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயிலிலும் பல்லாண்டுகாலமாகக் கூத்துக்களாடப்பட்டு வருகின்றன.

(தகவல் வி. வி. வைரமுத்து)

இவ்வாறு கூத்துக்கள் ஆடப்படுவதற்கு முன்னர் வடஇலங்கை எங்கும் மாரியம்மன் தாலாட்டு உடுக்கடித்துப் பாடப்பட்டு வந்தது எனக்கொள்ள இடமுண்டு. மாரியம்மன் தாலாட்டு மட்டுமன்றி மாரியம்மன் கதை, காத்தான் கதை என்பனவும் உடுக்கடி கதைகளாக அம்மன் கோயில்கள் தோறும் தொற்று நோய்கள் ஏற்பட்ட காலங்களில் நடைபெற்று வந்தனவாக வழிவழிவந்த பெரியவர்கள் மூலம் தான் அறிந்ததாக காரைநகர் நாகமுத்து கூறுவர். இதனை வித்தியானந்தனும் உறுதி செய்வர்.

"சில இடங்களிற் காத்தவராய சுவாமியாக உருக்கொண்டு ஆடும் ஒருவரை மேலும் உருவேற்றும் பொருட்டு அல்லது உற்சாகப்படுத்தும் பொருட்டு உடுக்கடித்துப் பூசாரிமாரால் காத்தவராயன் பாடல்கள் பாடப்படுகின்றன. இங்கு இக் காத்தவராயன் பாடல்கள் முழுக்க முழுக்க ஒரு சமயச் சடங்காக நிகழ்த்தப்படுகின்றன. இன்றுஞ் சிலவிடங்களிற் கோயிற்சடங்கு வைபவங்களில் பலர் சூழ்ந்திருந்து கேட்க ஒருவரே உடுக்கடித்து தனியேதானே அபிநயித்து காத்தவராயன் பாடல்களைப் பாடிக் கதை விளக்கமளிப்பதைக் காணலாம்".
என்பர் பேராசிரியர் சு. வித்தியானந்தன். (1986 : V).

அக்காலத்தில் வடஇலங்கையில், வேளாண்மைக் காலங்களில் உடுக்கடித்துப் பாடி வந்திருக்கிறார்கள். பல பெரியார்களின் வீடுகளிலும் இரவு நேரங்களில் பொழுது போக்காக உடுக்கடிக் கதை நிகழ்த்தப் படுவது வழக்கமென்பர் சொர்ணலிங்கம். (1968 : 7)

## உடுக்கடி வேலன்

காரைநகரில் உடுக்கடி வேலன் என்பவரின் பரம்பரையில் வந்த நாகமுத்து என்பவர் தங்களுடைய பரம்பரையினர் எவ்வாறு உடுக்கடி கதையைப் பேணிவந்தனர் என்றும், காலப்போக்கில் உடுக்கடி கதைகள் எவ்வாறு கூத்துக்களாகின என்றும் விபரமாகக் கூறினார்.

காரைநகர் கிழக்கில் பிட்டியோலை என்னுமோர் இடமுண்டு. இங்கே ஆதியாவளவு எனப்படும் பெரியதொரு வளவு காணப்படுகிறது. இவ்வளவின் சொந்தக்காரராகவிருந்தவர் உடுக்கடிக் கலைஞராகிய நாகர் என்பவர். இவருடைய மகனே உடுக்கடி வேலனாவர். உடுக்கடி வேலனின் மகன் சின்னப்பு என்பவர் மிசன் பாடசாலையொன்றில் ஆசிரியராக விருந்தவர். இவர் மிகவும் இளம் வயதிலேயே மறைந்துவிட்டார். இவருடைய மகனே நாகமுத்து என்பவராவர்.

நாகமுத்துவின் கருத்துப்படி இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து குடியேறிய தமது மூதாதையர் முதன் முதலிற் குடியேறிய காணியே ஆதியாவளவாகும். இது முதலில் ஆதியாள் வளவு என்றே அழைக்கப்பட்டதாம். பின்னர் ஈறுகெட்டு ஆதியாவளவு ஆகிவிட்டது. ஆதியாவளவு கலைவளர்த்த பெருமைக் குரியது. இந்த வளவில் எத்தனையோ உடுக்கடி கதைகளும், கூத்துக்களும், பள்ளு நாடகங்களும் நடைபெற்றன எனத் தமது பேரனார் உடுக்கடி வேலன் மூலம் தாம் கேள்விப்பட்டதாக நாகமுத்து கூறுவர். உடுக்கடி வேலன் உடுக்கடிக்கதை சொல்வதில் மட்டுமன்றி சோதிடத்திலும், விஷக்கடி வைத்தியத்திலும், மாந்திரீகத்திலும் கைதேர்ந்தவர் எனக்கூறிக் கொள்கிறார்கள். இவர் 1864 ஆம் ஆண்டு பிறந்தவர். 1953 ஆம் ஆண்டு தமது 89 ஆம் வயதில் மரணமடைந்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இவர் உடுக்கடித்துக் கதை சொல்லும் பிரபலமான கலைஞராக விளங்கினார்.

இவர் தமது இளம் வயது தொடக்கம், உறவினர்கள் சிலருடன் வன்னிப் பகுதிக்குத் தொழில் செய்வதற்காக நடந்து செல்வது வழக்கம். அவ்வாறு செல்லும் பொழுது இடைக்கிடை தங்கியே செல்ல வேண்டும். எனவே பொழுது போக்குக்காகத் தங்களுடன் உடுக்கு வாத்தியத்தையும் எடுத்துச் செல்வர். இரவுநேரங்களில் வேலர் உடுக்கடித்துக் கதை சொல்வது வழக்கம். இவருடைய உடுக்கடி கதையைக் கேட்பதற்கு நூற்றுக்கணக்கான கிராமமக்கள் குறிப்பாக அடிநிலை மக்கள் வந்து சேர்வதுண்டு. உடுக்கடி வேலன் வரும்பொழுது, அவரை வரவேற்று உபசரிப்பதில் எல்லாக் கிராம மக்களும் பெருமகிழ்ச்சி கொண்டனர்.

இவர் கைதடி, சாவகச்சேரி, பளை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, குமுழமுனை, தென்னமரவடி, கும்புறுபிட்டி, திருகோண மலை ஆகிய இடங்களிலெல்லாம் உடுக்கடித்துக் கதைகூறி வந்ததாகக் கூறப்படுகிறது. (தகவல் : திருமேனி)

உடுக்கடி வேலன் இக்கலையைத் தம்முடைய தந்தையாரிடமிருந்து கற்றுக்கொண்டாரெனவும் அவரும் இப்படியே வன்னிப் பகுதிக்குச் சென்று தொழில் செய்யும் காலத்தில் உடுக்கடித்துக் கதை கூறி வந்தாரெனவும் இவர்கள் கூறுகின்றனர்.

முதலாம் உலகமகா யுத்தத்தின் போது, வேலன் திருகோணமலையிலே சீனன் குடாவிலே தொழில் புரிந்திருக்கிறார். காரைநகரிற் பிறந்த இவர் கும்புறுப்பிட்டியில் (திருமலை) திருமணஞ் செய்தார். அத்திருமணத்தின் மூலம் பிறந்த மகன் சின்னப்பு. அவரின் மகனே நாகமுத்து ஆவர்.

உடுக்கடி வேலன் சிறுவனாயிருக்கும் காலத்திலிருந்தே இந்தியக் கலைஞர்கள் வடஇலங்கைக்கு வந்து கோயில் திருவிழாக்களின்போது கலைநிகழ்ச்சிகளை நிகழ்த்துவதுண்டு. அக்காலத்தில், பெண்கள் மட்டுமன்றி, ஆண்களும் கோயில் திருவிழாவில் நடனமாடினார்கள் எனத்தான் அறிந்ததாக நாகமுத்து கூறுகின்றார். அவர்களுடைய நடனம் கதை தழுவிய கூத்தாக அமைந்திருக்க வேண்டும். ஏனெனில் நாகமுத்து அந்த ஆடல்கள் பற்றிக்கூறும் பொழுது அடிக்கடி பிரயோகித்த வசனமிதுவாகும்.

"அவை (நடனக்கலைஞர்கள்) சும்மாவும் ஆடுவினம் கதை கோத்தும் ஆடுவினம்" கதைகோத்தும் ஆடுவினம் என இவர் குறிப்பிடுவது நாட்டிய நாடகம் போன்ற ஓர் ஆடலை அல்லது கதை தழுவிய கூத்தை என்பதிற் சந்தேகமில்லை.

மலையாளக் கலைஞர்களும், கோயில் விழாக்களுக்கு அழைத்துவரப்பட்டதாகவும் இவர் கூறுகின்றார். அப்படியானால் அவர்கள் ஆடிய ஆட்டம் கதகளி நடனமாகவும் இருக்கலாம். நாகமுத்துவுக்கு இதுபற்றிய மேலதிக விபரமொன்றும் தெரியவில்லை. ஆனால் "அந்தக் கதை கோத்த நடனத்தைப் பார்த்த அப்பா (பேரனார்) காத்தான் கதையையும் கோத்துக் கூத்தாகப் போட்டார்." என்கிறார் இவர். ஆகவே காத்தவராயன் கூத்து கோவலன் கூத்து என்பன இவ்வாறுதான் முகிழ்த்திருக்க வேண்டும் போலத் தெரிகின்றது. காத்தவராயன் கூத்து மரபைத் திருகோணமலைவரை எடுத்துச் சென்றவர் உடுக்கடி வேலன்தான் என்று பெருமையாகப் பேசிக் கொள்கிறார் காரைநகர் நாகமுத்து. இதை உறுதி செய்யும் வகையில் காரைநகர் காத்தான் கூத்துப்

பிரதியும், பளைப் பிரதியும், முல்லைத்தீவுப் பிரதியும், கும்புறுப்பிட்டிப் பிரதியும் பெரும்பாலும் ஒத்திருக்கக் காணலாம். (பிரதி தந்தவர்கள் : திருமேனி, நாகமுத்து)

உடுக்கடி வேலன் கூத்து ஆடிய காலத்தில் வேடமுகங்களும் (முகமூடி) பயன்படுத்தப்பெற்றன. வயது முதிர்ந்தவர்களின் வயது தெரியாமலிருப்பதற்கும், பாத்திரங்களைத் தெளிவாகக் காட்டுவதற்கும் வேடமுகங்கள் பெரிதும் பயன்பட்டன. இவை எப்பொழுது கைவிடப்பட்டன எனத் தெரியவில்லை.

## கதை வேறுபாடு

வட இலங்கையிலாடப்பெறும் காத்தவராயன் கூத்துக் கதைக்கும் தமிழகத்திலாடப்பெறும் காத்தவராய சுவாமி கூத்துக் கதைக்கும் நிறைய வேறுபாடுண்டு. வானமாமலை பதிப்பித்த காத்தவராயன் கதைப் பாடல் எனும் நூலில் (1971) வேறுவிதமாகக் கதை அமைந்துள்ளதை அவதானிக்கலாம். இவ்வேறுபாட்டை உடுக்கடி கதையிலும் காணலாம்.

ஈழத்துக் காத்தவராயன் கூத்தில், 'காத்தவராயன்' சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் (சக்தி) மகனாக அவதரித்து முத்து மாரியம்மனால் வளர்க்கப்பட்டவனாக காட்டப் பெறுகின்றான். (காத்தவராயன் நாடகம் 1986 : 58 - 59) தென்னகத்திலாடப்பெறும் காத்தமுத்து நாடகத்தின்படி சிவசுப்பிரமணியரே காத்தவராயனாக அவதாரமெடுத்து, உமையம்மையின் நந்தவனத்தைக் காவல் செய்வதாகச் சொல்லப்படுகிறது. (காத்தமுத்து நாடகம் : 1975 : 16) காத்தவராயன் கதைப்பாடலின்படி காத்தவராயன் முற்பிறப்பில் தேவனாக இருந்தபோது ஆறு தேவ மாதரைக் காதலித்த காரணத்தாற் சிவனின் கோபத்திற்கு ஆளாகிப் பூமியிற் பிறந்து, பிராமணப் பெண்ணொருத்தியை மணக்கின்றான். பிராமணப் பெண்ணை மணந்த குற்றத்திற்காகக் கழுவேறி மடிகின்றான். பின்னர் மக்களாற் கடவுளாகப் போற்றப்பட்டு வழிபாட்டுக்குரியவனாகின்றான். (காத்தவராயன் கதைப்பாடல் : 1971) யாழ்ப்பாணத்து உடுக்கடி கதைப்பாடலில் மேற்படி வரலாறு காணப்படவில்லை.

## நவாலியும் கண்ணகி கதையும்

நவாலி வடக்கில் ஒரு கண்ணகியம்மன் கோயிலுள்ளது. இங்கே நீண்ட காலமாகவே கண்ணகி கதை, உடுக்கடி கதையாகச் சொல்லப்பட்டு வந்தது. 1930 அல்லது 1935 அளவில் உடுக்கடி கதைக்குப் பதிலாகக் கோவலன் கூத்து, ஆடப்படலாயிற்று. உடுக்கடி கதையிற் பாடப்பட்ட பாடல்களையே பாத்திரங்கள் பாடி ஆடின. இப்பாடல்களும் காத்தவராயன் கூத்து மெட்டிலேயே அமைந்தனவாகும். காத்தவராயன் கூத்துப்பாடல் மெட்டிலமைந்த கூத்துக்கள் 'கதைவழிக் கூத்துக்கள்' எனப்படும். உதாரணமாக கண்ணகியை எங்கே அடைக்கலமாக வைப்பது எனக் கோவலன் பாடுவதாக உள்ள பாடல் வருமாறு :-

யார் வீடு தேடிடட்டோ - எந்தன்
ஆரணங்கே உன்னை வைக்க
செட்டிவீடு தேடிடட்டோ - எந்தன்
சேயிழையே உன்னை வைக்க
தட்டா வீடு தேடிடட்டோ - எந்தன்
தையலரே உன்னை வைக்க

இப்பொழுது இங்கே உடுக்கடி கதையும் நடைபெறுவதில்லை. கூத்தும் நடைபெறுவதில்லையெனத் தெரியவருகிறது. (தகவல் : நவாலி முருகேசு)

## சுட்டிபுரமும் கண்ணகி கதையும்

சுட்டிபுரம் அம்மன் கோயிலிலும், நுணாவில் கண்ணகி அம்மன் கோயிலிலும்,

வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயிலிலும் இவ்வாறு கண்ணகியம்மன் கதையை உடுக்கடித்துப் பாடிவந்தனர். பின்னர் உடுக்கடி கதையும், கோவலன் கூத்தும் ஆடிவந்தனர். இப்பொழுதும் நுணாவிலிலும், வற்றாப்பளையிலும் கண்ணகி கதை பாடப்பட்டு வருவதைக் காணலாம்.

*(தகவல் : ஐயாத்துரை)*

வடஇலங்கை முழுவதிலுமிருந்த கண்ணகியம்மன் கோயில்கள்தோறும், கண்ணகியின் வரலாறு நீண்டகாலமாகப், பாடப்பட்டு வந்தது. ஆறுமுகநாவலர் கண்ணகி வழிபாட்டை விரும்பவில்லை. கண்ணகி ஒரு மானிடப் பெண். அவளை வணங்கக் கூடாதென்பது அவருடைய கருத்தாகும் (ஆறுமுகநாவலர் : 1967 : 68) அதனால் நாவலரைப் பின்பற்றிய பலர் கண்ணகி அம்மன் கோயில்களை முத்துமாரியம்மன் கோயில்களாக மாற்றிவிட்டனரெலாம். உதாரணமாக அல்வாய் முத்துமாரியம்மன் கோயில், காரைநகர் பாலாவோடை முத்து மாரியம்மன் கோயில் என்பனவற்றைக் கூறலாம். இதனால், கண்ணகியின் கதையைப் பாடுவது வடக்கில் அருகிவிட்டது.

## கண்ணகியும் பத்தினித் தெய்வமும்

தமிழ் மக்களிடையே உள்ள கண்ணகி வழிபாடு சிங்கள மக்கள் மத்தியில் இன்றும் பத்தினித் தெய்வ வழிபாடாக நிலவி வருகிறதென்றும், பத்தினித் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையனவாக சத்பத்தினி வழிபாடு கிரி அம்மாமார் வழிபாடு என்பனவுள்ளனவென்றும் தெரிய வருகிறது. சத்பத்தினி வழிபாடு, கிரி அம்மாமார் வழிபாடு என்பனமட்டுமன்றி, ரத்னாவளி வழிபாடு (Raghavan 1967 : 130 - 131) அமராவதி வழிபாடு (Obeysekere 1984 - 300) என்பனவும் பத்தினி வழிபாட்டுடன் தொடர்புடையன வாகவுள்ளன. கண்ணகி வழக்குரை, கோவலன் கதை என்பன உடுக்கடி கதைகளாக ஈழத்து இந்துக்களிடையே நிலவிவருவதுபோல பௌத்த சிங்கள மக்களிடையே சத்பத்தினி கவி (Obeysekere 1984 : 121 - 127) ரத்னாவளி கவி (Raghavan 1967 : 130 - 131) என்பன பத்தினி வழிபாட்டின்போது பாடப்பட்டும் ஆடப்பட்டும் வருகின்றன. சொக்கறி எனும் சிங்களக் கூத்தும் பத்தினி வழிபாட்டுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்ற தென்பர் சரச்சந்திரா (1964 : 84) சொக்கறி நாடகப் பாடல் மெட்டுக்கள் சில யாழ்ப்பாணத்து உடுக்கடிப் பாடல் மெட்டுகளுடன் ஒத்திருக்கக் காணலாம்.

பத்தினித் தெய்வம் மாங்கனியிலிருந்து பிறந்தவள் எனும் ஐதீகம் சிங்கள மக்களிடையே இருப்பதுபோலக் கண்ணகியும் மாங்கனியிலிருந்து பிறந்தவள் எனும் ஐதீகம் ஈழத்து இந்துக்களிடையே உண்டு. (கண்ணகி வழக்குரை : 1968 : 10 - 18)

தமிழகத்திலாடப்படும் கோவலன் நாடகத்திலும் (1975) ஈழத்திலாடப்பெறும் கோவலன் நாட்டார் கூத்திலும் (யாழ் கை. எ.பி.) கண்ணகி காளியின் அவதாரமாகச் சொல்லப்படுகின்றாள். இளங்கோவடிகள் படைத்த கண்ணகிக்கும், கூத்துக்களில் வரும் கண்ணகிக்கும் நிறைய வேறுபாடுண்டு. உடுக்கடி கதையிலும் இவ்வேறுபாட்டைக் காணலாம்.

ரத்னாவளி கவியில், ரத்னாவளி பத்தினித் தெய்வத்தைப் போன்றவளாக வருணிக்கப்படும் அதேவேளையில் காளி தேவியையொத்தவளாகவும் விபரிக்கப் படுகின்றாள். இவ்வருணனை கேரளத்தில் வணங்கப்பெறும் பகவதியை ஒத்ததாகவு முள்ளதென்பர் ராகவன் (1967 : 131).

தொற்று நோய்களிலிருந்து காக்கும் தெய்வமாக வடஇலங்கையில் மாரியம்மனும், இலங்கையின் ஏனைய பகுதிகளில் பத்தினித்

தெய்வமும் (Goonatilleka 1976 : 06) கேரளத்தில் காளி, பகவதி ஆகிய தெய்வங்களும், (Achyuta Menon 1936 : 235 - 236) வணங்கப்படுகின்றன. மேலும் கேரளத்தில் மாரியம்மன், ஸ்ரீ குறும்பா, வைசூரிமாலா ஆகிய தெய்வங்கள் நோய்களைப் பரப்பும் தெய்வங்களாகவும், குணப்படுத்தும் தெய்வங்களாகவும் வணங்கப்படுகின்றனவென்பர் குறுப் (Kurup 1977 : 31) மாரியம்மன் வழிபாடு, பத்தினி வழிபாடு, பகவதி அல்லது காளி வழிபாடு ஆகிய யாவற்றிலும் உடுக்குடன் கூடிய ஆடல், பாடல் என்பன முக்கியமாக இடம்பெறும் ஒருமைப்பாட்டினைக் காணக்கூடியதாகவுள்ளது.

பத்தினி வழிபாடு சேரநாட்டிலிருந்து கஜபாகு எனும் மன்னனால் (கி. பி. 174 - 196.) இலங்கைக்கு எடுத்துவரப்பட்டது. (Raghavan : 1967 : 125) வட இலங்கையிலும் கிழக்கிலங்கையிலும் மலையாளத் தொடர்பிருந்திருக்கின்றது. எனவேதான் மேலே குறிப்பிட்ட தெய்வங்களிடையே மட்டுமன்றி அத்தெய்வங்களை வழிபடும் முறையிலுங் கூட் ஒற்றுமை காணப் படுகிறதெனலாம்.

## ஆடல் மரபும் கதைகூறும் மரபும்

மேனாட்டு மரபில் 'Ballad' என்பது முதலில் ஆட்டத்தின் வழியாகக் கதையென்பதைச் சித்தரித்தலாகும். (Chambers Dictionary : 1989 : 94) பின்னர் (ஆட்டம் மறைய) அதுவெறும் கதையாகவே மாறுவதைக் காணலாம். சங்க இலக்கியங்களில் விறலியர்கள், பாணர்கள் கதைகளைப் பாடிக்காட்டிய மரபு ஒன்று உள்ளார்ந்து நிற்பதைக் காணலாம். (Sivathamby 1981 : 195)

உடுக்கடி கதையை நோக்கும்போது முதலில் ஆட்டமும் அதன்வழி கதை சொல்லும் மரபும் தோன்றியிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. தெய்வமேறி உருவாடுவதும், அடியவர்கள் அத் தெய்வத்தைப் போற்றிப் பாடுவதும், தெய்வத்தின் வரலாற்றைப் பாடுவதும் உடுக்கடி கதையின் ஆரம்பமாகும். காலப்போக்கில் ஆடல் மறையக் கதை சொல்லும் மரபு வளர்ச்சி பெறலாயிற்று. மேலுஞ்சிறிது காலஞ்செல்லக் கதை சொல்லும் மரபிலிருந்து நாடகம் மலரத் தொடங்கலாயிற்று எனக் கொள்ளலாம். ஆகவே நாடகத்தின் தோற்றத்துக்கு உடுக்கடி கதையும் ஓர் ஊற்றுக் காலாக உள்ளது என்பது தெரியவருகிறது.

## இக்கட்டுரை எழுத உதவிய நூல்கள்


| | | |
|---|---|---|
| ஆறுமுக நாவலர் பிரபந்தத்திரட்டு | - | சென்னை 1964 |
| கண்ணகி வழக்குரை | - | வி. சி. கந்தையா, பதிப்பு காரைதீவு மட்டக்களப்பு 1968 |
| காத்தமுத்து நாடகம் | - | சென்னை 1975 |
| காத்தவராயன் கதைப் பாடல் | - | வானமாமலை பதிப்பு மதுரை - 1971 |
| காத்தவராய சுவாமி கதை | - | வானமாமலை பதிப்பு சென்னை - 1986 |
| காத்தவராயன் நாடகம் | - | இ. பாலசுந்தரம் பதிப்பு யாழ்ப்பாணம் 1986 |
| தமிழியற் சிந்தனைகள் | - | சு. வித்தியானந்தன் யாழ்ப்பாணம் 1979 |
| தமிழ் நாடக வரலாறு | - | பெருமாள் சக்தி மதுரை - 18; 1979 |
| மட்டக்களப்பு தமிழகம் | - | வி. சி. கந்தையா யாழ்ப்பாணம் 1964 |
| A note on Kali or Bagawathi Cult in Kerala in Krisnaswami Ayankar Commemoration Volume | - | Achyutha Menon Madras 1936 |
| Drama in ancient Tamil Society | - | K. Sivathamby Madras 1981 |
| Nadagama | - | M. H. Goonatilleka Delhi 1984 |
| Sinhala Natum | - | M. D. Raghavan Colombo 1967 |
| The cult of the Goddess Pattini | - | G. Obeysekera London 1984 |


### நேர்முகம் காணப்பட்டவர்கள்

| | |
|---|---|
| சி. நாகமுத்து | காரைநகர் |
| இ. திருமேனி | கும்புறுப்பிட்டி |
| நா. முருகேசு | நவாலி |